2015 ஆகஸ்ட் 25]

அவற்றிற்கு தனிக் கேள்வி போடவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***50751—டாக்டர் வி.எஸ். விஜய்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *வேலூர் தொகுதி, கன்சால்பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவமனையைக் கால்நடை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) *மற்றும்* (ஆ) *வேலூர் தொகுதி, கன்சால்பேட்டைப் பகுதியில் செயல்பட்டு வருகின்ற கால்நடை மருத்துவமனையைப் பன்முக மருத்துவமனையாக மாற்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். ஒரு கால்நடை மருத்துவமனையைப் பன்முக மருத்துவமனையாக மாற்ற வேண்டுமென்று சொன்னால், பல்வேறு விதிமுறைகள் உள்ளன. அந்த மருத்துவமனையைத் துறை ஆய்வு செய்தபோது, அந்த விதிமுறைகளெல்லாம் சரியாக இருக்கின்றன. கால்நடைகளுக்கும் கருணை மனதோடு பல்வேறு திட்டங்களை அளித்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய* (மேசையைத் தட்டும் ஒலி) *கவனத்திற்கு இதை எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வி.எஸ். விஜய் அவர்கள்.*

டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வம், வாழும் மனித தெய்வம், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் ஒரே வாரிசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விலையில்லா ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வழங்கி, இந்தியாவிலேயே, தமிழகத்திலே கால்நடைத் துறையிலே ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் தொகுதி, கன்சால்பேட்டையில் உள்ள கால்நடை மருத்துவமனை 50 ஆண்டுகால பழமைவாய்ந்த ஒரு மருத்துவமனையாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இங்கே Zoonosis *என்று சொல்லப்படுகின்ற, கால்நடைகளுக்கு வருகின்ற நோய்களுக்கான பரிசோதனை மையம் மற்றும்* Virology *பரிசோதனை செய்யக்கூடிய* Lab *ஆகிய வசதிகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு வாயில்லாத ஜீவன்களுக்கும் வாழ்வு அளித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்த மருத்துவமனையை ஒரு பன்முக* (Multi Speciality) *மருத்துவமனையாக மாற்றியமைத்தால், வேலூர் மாவட்டம் மட்டுமல்லாமல் பக்கத்தில் இருக்கின்ற மாவட்டங்களும் பயனடையும். இதை உடனடியாக பன்முக மருத்துவமனையாக மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்கெனவே 6 பன்முக மருத்துவமனைகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. கூடுதலாகப் பன்முக மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதிக்கு*

2015 ஆகஸ்ட் 25]

நிச்சயமாக பன்முக மருத்துவமனை அமைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***42375 திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் கிராம ஊராட்சி, காமநாயக்கம்பாளையத்தில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அழியாக் கடலோ, அணிமலர்த் தடமோ, வானுறு மீனோ, மாளிகை விளக்கோ, கற்பகத் தருவோ என தமிழ்நாட்டு மக்கள் வியந்து வரவேற்றிட, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் திரவமாம் தாய்ப் பாலைக் குழந்தைகளுக்குத் தவறாமல் தந்திட தாய்மையின் எண்ண அலைகளுக்கு ஏற்றம் தந்து, தாய்ப் பால் ஊட்ட தனி அறைகள் அமைத்து, தலைவர்களின், மக்களின் கலங்கரை விளக்காய் இருந்து பல்வேறு துறைகளிலும் பாருக்கே எடுத்துக்காட்டு தமிழ்நாடு என உயர்த்திட்ட, யாதுமாய் நின்ற தாயை வணங்குகிறேன்.

பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் கிராம ஊராட்சி, காமநாயக்கம்பாளையத்திலுள்ள நெசவாளர்களுக்கு கூட்டுறவுச்